OS: 509/2018

Date: 20.06.2022

பெயர் : மனோகரன்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி - 1, 2ம் பிரதிவாதிகள் தரப்பில்**

நான் தாவா கோவிலில் தர்மகர்த்தாவாக சுமார் 23, 24 ஆண்டுகள் இருந்து வருகிறேன். தற்போதும் நான் தர்மகர்த்தாவாகத்தான் இருந்து வருகிறேன். நான் பரம்பரை தர்மகர்த்தாவா என்றால் இல்லை, பொது குழுவின் மூலம் நியமனம் செய்யப்பட்டேன். எத்தனை ஆண்டுகளுக்க ஒருமுறை தர்மகர்த்தா நியமிக்கப்படுவார்கள் என்றால் ஒரு முறை தேர்நதெடுக்கப்பட்டால் 5 ஆண்டுகள் வரை இருப்போம், ஆனால் நாங்கள் வழக்கு நடைபெற்று வருவதால் தொடர்ந்து எங்களை விடுவிக்கப்படாமல் தொடர்ந்து தர்மகர்த்தாவாக இருந்து வருகிறேன். நான் தர்மகர்த்தா என்ற நிலையில் இருந்துதான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். மற்ற 4 வாதிகளும் என்னுடன் தர்மகர்த்தாவாகவே இருந்து வருகிறார்கள். நான் தர்மகர்த்தா என்ற கோதாவில்தான் இருந்து வருகிறேன் என்றும், இவ்வழக்கானது trustee என்ற முறையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 3 தீர்மானங்கள் நான் எனது முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்தபோதுதான் போடப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணத்தில் கண்டுள்ள தீர்மானம் 1998ம் வருடம் போடப்பட்டது, அதனை நான் வழக்கு தாக்கல் செய்தபோது தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கு 2007ம் வருடம் மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும்போது தாவா சொத்தில் வாதிகளாகிய எங்கள் trustன் உரிமை குறித்தும் யார் யாருக்கு எதிராக trust சார்பாக வழக்கு தாக்கல் செய்ய போகிறோம் என்று தீர்மானம் எதுவும் போடப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருந்ததால் புதிய தர்மகர்த்தா தேர்வு செய்யப்படவில்லை. இந்த வழக்கு தடத்து பிரச்சனை இருப்பதால்தான் தொடர்ந்து தர்மகர்த்தா தேர்வு செய்யப்படவில்லை. இந்த வழக்கு 2007ம் ஆண்டுதான் தாக்கல் செய்யப்பட்டது, ஆனால் 1986ம் வருடமே அறநிலையத்துறை உத்தரவு உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 6ல்

அ.வ.44/2010 வழக்கு நிலுவையில் இருந்ததால்தான் புதிய Trusteeகள் தேர்வு செய்யப்படவில்லை என்று உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு 2007ம் ஆண்டு போடப்பட்டது என்றும், நாங்கள் போட்ட எந்த தீர்மானமும் செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு இருந்தபோது தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டார் என்றால் சரிதான். மேற்படி ஆணையர் அறிக்கையில் ஒரு புளியமரமும், ஒரு புங்கமரமும் மனு சொத்தில் உள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அது மனு சொத்தின் ஆரம்பத்தில் உள்ளது. ஆணையர் அறிக்கையில் கிழக்கிலிருந்து மேற்காக 4 தண்ணீர் குழாய்கள் பதிக்கப்பட்டிருந்தன என குறிப்பிடப்பட்டுள்ளது. மேல்புறம் ஆரம்பத்தில் பல தொலைபேசி ஒயர்கள் உள்ளதாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தண்ணீர் குழாய்களும், தொலைபேசி ஒயர்களும் பின்னால் இருக்கும் வீடுகளுக்கு செல்லக்கூடியது என்றால் சரிதான், எங்களை கேட்காமல் மேற்படி தண்ணீர் குழாய்களையும், தொலைபேசி ஒயர்களையும் வைத்துவிட்டார்கள். கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடமாக இருந்தால் அதனை தீர்மானத்தின் மூலம் மேற்படி பைப் லைனின் தொலைபேசி ஒயர்களையும் அகற்றி இருப்போம் என்றும், மனு சொத்தின் தடமானது பொது பாதையில் வருகிறது என்றும், மேற்படி இடத்தில்தான் தண்ணீர் குழாய்களும், தொலைபேசி ஒயர்களும் வருகிறது என்று சொன்னால் சரியல்ல. தண்ணீர் குழாய்களும், தொலைபேசி ஒயர்களும் பொது பாதையில் வருவதால்தான் வாதிகள் தரப்பில் அகற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆரம்பத்தில் மனு சொத்தானது 2 முதல் 3 அடி வரை பள்ளமாக இருந்தது என்று சொன்னால் சரிதான். மேற்படி பள்ளமாக இருந்த பகுதியை ஊர் பொது மக்களும், பிரதிவாதிகளும் சேர்ந்து மண் சாலை அமைத்தார்கள் என்றால் சரியல்ல, தற்போதும் 3 அடி பள்ளமாக இருந்து வருகிறது. இந்த வழக்கில் மீண்டும் இந்த நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற அறிக்கை வரைபடங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, எனது வழக்கறிஞருக்குத்தான் தெரியும். தாவா சொத்தினை ஆணையர் நேரில் பார்வையிடும்போது பிரதிவாதிகள் தரப்பில் ஆணையருக்கு அளித்த குறிப்பாணைகள் பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, எனது வழக்கறிஞருக்குத்தான் தெரியும். தாவா

சொத்திற்கு வடபுறத்தில் 1, 2 பிரதிவாதிகள் உள்ளனர், தென்புறத்தில் 3, 4 பிரதிவாதிகள் உள்ளனர், டாக்டர் சந்திரசேகரன் இடத்திற்கு கிழக்கே தாவா சொத்தின் தென்கிழக்கே 5, 7 பிரதிவாதிகள் வீடுகள் உள்ளது, தாவா சொத்திற்கு வடகிழக்கு பக்கத்தில் 1, 2 பிரதிவாதிகளின் வீட்டிற்கு கிழக்கே ஒரு மின்மாற்றி, ஒரு பஞ்சாயத்து கிணறு உள்ளது என்றால் சரிதான், அதற்கு அடுத்து 1, 2 பிரதிவாதிகளுக்கு சிமெண்ட் குடோன் உள்ளதா என்றால் இடம் உள்ளது, சிமெண்ட் குடோனா என்று எனக்கு தெரியாது, அதற்கு அடுத்து 6ம் பிரதிவாதி லட்சுமியின் வீடு அமைந்துள்ளதா என்றால் வீடு உள்ளது, அவர் பெயர் எனக்கு தெரியாது. எனக்கு தெரிந்துதான் 6ம் பிரதிவாதி லட்சுமியின் மீது வழக்கு தாக்கல் செய்துவிட்டு தற்போது நீதிமன்றத்தில் தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 5, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையருக்கு குறிப்பாணை வழங்கப்பட்டும் அவர் அந்த குறிப்பாணையை பெற்றுக்கொண்டு தாவா சொத்துக்களை பார்வையிட்டும், ஆணையர் அறிக்கையை குறிப்பிடப்படவில்லை என்பதால் மேற்படி ஆணையர் அறிக்கை ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையை பொறுத்து நீக்கறவு எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வழியாக ஓமலூர் பேருந்து நிலையம், தங்கம் தியேட்டர், கந்தசாமிகவுண்டர் திருமண மண்டபம் செல்லலாம் என்றால் தற்போது தாவா சொத்து திறந்த நிலையில் இருப்பதால் செல்லலாம், வேறு வழியும் உள்ளது.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

**ஒப்பம்/PW1**

**ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்**